**01.11.2022**

**OS.No. 525/2021 PW : 1, திரு. சீனிவாசன்**

**குறுக்கு விசாரணை...**

நான் 12ம் வகுப்புவரை படித்திருக்கிறேன். நான் ஒரு மருந்து கடையை நடத்தி வருகிறேன். நான் அதன் உரிமையாளர் ஆவேன். அதில் ஒரு பார்மஸிஸ்ட்-ஐ வைத்திருக்கிறேன். ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை பார்த்தால் அதை யார் கிரையம் கொடுத்தவர் மற்றும் கிரையம் வாங்கியவர் என்று என்னால் புரிந்து கொள்ளமுடியும். என் தந்தை நெடுஞ்சாலை துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். என் தந்தைக்கு 5 மகள்கள், 2 மகன்கள். என் தந்தை 30.09.1986ல் பணிஓய்வு பெற்றார். அவர் ஓய்வுபெற்றபோது அவருக்கு ரூபாய் 1 லட்சம் பணபலன் வந்தது. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் என் தந்தையின் பென்ஷன் புத்தகத்தை தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ.8 ஆகும். ரூபாய் 1 லட்சம் பற்றி வா.சா.ஆ.8ல் குறிப்பிடப்படவில்லை. என் தந்தை ஓய்வுபெற்றபோது அவரது மாத ஓய்வூதியம் ரூபாய் 3,000/- ஆகும். எந்த ஒரு காலகட்டத்திலும் நானும், என் தந்தையும், பிரதிவாதியும் இந்து கூட்டுகுடும்பமாக வாழ்ந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை 2003ல் இறக்கும்வரை நாங்கள் இந்து கூட்டுகுடும்பமாக இருந்தோம். ஆகவே 2003 வரை வாங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் எங்கள் இந்து கூட்டுகுடும்ப சொத்தாகும். பிரதிலோ, என் முதல் விசாரணையிலோ தாவா சொத்து இந்து கூட்டுகுடும்பமாக சொத்து என்று குறிப்பிடவில்லை. நான் 1995ம் வருடம் மேல் நல்லாத்தூர் கிராமத்தில் ஒரு

பிளாட்டை தனிப்பட்ட முறையில் வாங்கினேன். 1996ல் திருவள்ளூர் என்.ஜி.ஓ. காலணியில் ஒரு பிளாட்-ஐ வாங்கினேன். மணவாளநகரில் என் மகள் பெயரில் ஒரு பிளாட்-ஐ வாங்கியிருக்கிறேன். அந்த சொத்துக்கள் என் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். எங்கள் குடும்பத்தில் கூட்டுகுடும்ப வியாபாரம் என்று எதுவும் இல்லை. 1986ல் என் தந்தை ஓய்வுபெற்றபின்னர் 1989ல் என் சகோதரி மாலாவிற்கு திருமணம் நடந்தது. அதை என் தந்தை நடத்தி வைத்தார் என்று சொன்னால் நான் மருந்துகடை நடத்தி அந்த வருமானத்தில் இருந்து அந்த திருமணத்தை நடத்தினேன். 1995ல் என் மற்றொரு சகோதரியான லட்சுமியின் திருமணத்தை என் தந்தை தான் நடத்தி வைத்தார் என்றால் சரியல்ல. நான் தான் நடத்தி வைத்தேன். 1993ல் பிரதிவாதியின் திருமணத்தை நான் தான் நடத்தினேன். 1989 முதல் 1995 வரை உள்ள என் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை பிரதிவாதி பெயரில் வாங்குவதற்கான முழு கீரைய தொகையை என் தந்தை தான் கொடுத்தார் என்பது தான் என் வழக்காகும். என் கூற்றுபடி முழு கிரைய தொகையை என் தந்தை கொடுத்ததால் அவர் தான் தாவா சொத்தின் உரிமையாளர் ஆவார். ரூபாய் 83,275/-ஐ என் தந்தை பிரதிவாதியிடம் 8வது மாதம் 2002ல் கொடுத்தார். தேதி ஞாபகமில்லை. என் தந்தை வங்கியிலிருந்து அந்த பணத்தை எடுத்து கொடுத்தார். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பே பிரதிவாதி அவரது மனைவியுடன்

வில்லிவாக்கத்தில் தனி குடித்தனம் நடத்தினார். அதே காலகட்டத்தில் நான் என் மனைவியுடன் தாவா சொத்து உள்ள தெருவில் இருந்து 2 தெரு தள்ளி தனிக்குடித்தனம் நடத்தினேன். என்னுடன் என் பெற்றோர்கள் இருந்தார்கள். என் பெற்றோர்கள் என் வீட்டில் சில காலமும், பிரதிவாதியின் வீட்டில் சில காலமும் இருப்பார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி அப்துல் அமீத் என்ற மருத்துவரிடம் கம்பவுன்டராக பணிபுரிந்து கொண்டே ஒரு மருந்து கடையில் பகுதி நேரமாக வேலை பார்த்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பட்டாபிராமில் 2000ம் வருடத்தில் ஒரு மருந்துகடை வைத்திருந்தார். 2001ம் வருடம் அந்த மருந்துகடையை பிரதிவாதி விற்றுவிட்டார். சாரதா சுந்தரமூர்த்தி என்னுடைய அத்தை மகள். தாவா சொத்து விலைக்கு வருகிறது என்று நான் பிரதிவாதியிடம் சொன்னேனா என்று கேட்டால் நான் என் தந்தையிடம் சொன்னேன். தாவா சொத்து கிரையம் வாங்கப்பட்ட காலத்தில் அது காலிமனையாக ஒரு மின் இணைப்புடன் இருந்தது. தாவா சொத்தின் விற்பனையாளரான ராமதாஸ் என்பவரை எனக்கு நன்றாக தெரியும். கிரைய பேச்சு வார்த்தையில் நானும் பங்கு கொண்டு தான் கிரைய தொகையை முடிவுசெய்தோம். கிரையம் எப்போது பதிவுசெய்யப்பட வேண்டும் என்று நானும், என் தந்தையும், பிரதிவாதியும் ஆலோசித்து தான் முடிவு செய்தோம். அந்த ஆலோசனையின் அடிப்படையில் தான் 19.09.2002ல் கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டது. அந்த கிரைய ஆவணத்தை பதிவு செய்தபோது நானும் பிரதிவாதிக்கு உதவியாக சார்பதிவாளர்

அலுவலகத்திற்கு சென்றேன். கிரைய பத்திரத்தை பதிவு செய்வதற்கு முன்னர் அதில் உள்ள வாசகங்கள் சரியாக இருக்கிறதா என்று நானும் படித்து பார்த்தேன். அதன் பின்னர் தான் அது பதிவுசெய்யப்பட்டது. கிரையம் பதிவு செய்யப்பட்ட பின்னர் தாவா சொத்தில் வீடுகட்ட வேண்டும் என்று பிரதிவாதி முடிவு செய்தாரா என்று கேட்டால் நானும், என் தந்தை, தாயும், என் சகோதரிகளும் சேர்ந்து வீடுகட்ட வேண்டும் என்று முடிவு செய்தோம். தரைதளம் மற்றும் மேல்தளம் கட்டுவதற்கு அந்த காலகட்டத்தில் ரூபாய் 10 லட்சம் செலவானது. சொத்தின் வீடுகட்டும் போது பிரதிவாதி சுயமாக தொழில் செய்யவில்லை. வேறொரு இடத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். பிரதிவாதி வேறு இடத்தில் வேலை செய்ததாலும் நான் சுயமாக தொழில் செய்ததாலும் நான் பிரதிவாதியிடம் சேர்ந்து வந்தால் தான் கடன் கொடுக்க முடியும் என்று சாரதா சுந்தரமூர்த்தி சொன்னார் என்றால் சரியல்ல. வங்கியின் கடன் வாங்கவேண்டும் என்றால் சில அடிப்படை ஆவணங்கள் வேண்டுமென்று சாரதா சுந்தரமூர்த்தி என்னிடம் சொல்லவில்லை. வீடுகட்டுவதற்கு கடன் கேட்டு செப்டம்பர் 2003ல் வங்கியில் மனு கொடுத்தோம். எனக்கு தனியாக ஆடிட்டர் இருக்கிறார். 2002-2004 வரை நான் வருமானவரி ரிட்டனை தாக்கல் செய்தேன். அதற்கு பின்னர் தாக்கல் செய்யவில்லை. அது வாசாஆ4 மற்றும் 5 ஆகும். வாசாஆ4 மற்றும் 5 தாக்கல் செய்தபோது எனக்கு பான் கார்டு இல்லை. அதை கேட்டு மனு செய்திருந்தேன். 2001-2002, 2002-2003க்கான வருமான வரிகணக்கை

25.08.2003ல் ஒன்றாக தாக்கல் செய்தேன். வாசாஆ4 மற்றும் 5ல் உள்ள வருமானத்தின் அடிப்படையில் செப்டம்பர் 2003ல் கடன்கேட்டு வங்கியில் மனு கொடுத்தோம். பிரதிவாதியிடம் இதுபோன்று வருமான வரி ரிட்டன் இல்லாததாலும் என்னிடம் வருமான வரி ரிட்டன் இருந்ததால் கடன்கேட்டு மனு கொடுத்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அப்போது வருமானமே இல்லை. தரைதளம் கட்டுவதற்கு உத்தேசமாக ரூபாய் 5,94,934/-ஆகும் என்று வாசாஆ2ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 75 சதவீதம் தான் கடனாக கொடுத்தார்கள் மீதி தொகையை கையில் இருந்து போடவேண்டும். முதல்தளம் கட்டுவதற்கு ரூபாய் 4 லட்சம் கடன்கேட்டு அதே வங்கியில் ஜனவரியில் மனு கொடுத்தோம். அதில் 50 சதவீதமான ரூபாய் 2 லட்சம் தான் கடன் கொடுத்தார்கள். வங்கி கொடுத்த கடன் தொகை போக மீதிதொகையை பிரதிவாதி தான் போட்டு வீட்டை கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. முதலில் வங்கி கடனை வாங்கும்போது தாவா சொத்தின் மூல பத்திரத்தை வங்கியில் வைக்கவில்லை. மீதி தொகையை நான் போட்டு தான் வீடுகட்டினேன் என்பதற்கு ஆவணங்கள் இல்லை. ஆனால் என் தாயார் மற்றும் என் சகோதரிகளுக்கு அந்த விவரம் தெரியும். அவர்கள் சாட்சி சொல்ல வருவார்கள். கடன் தொகையை மாதா மாதம் திரும்ப செலுத்த வேண்டும். கடன் தொகை எப்பொழுது முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது என்று கேட்டால் 2007ல் முடிக்கப்பட்டது. கடன் தொகை முழுவதையும் மாதா மாதம் பிரதிவாதி தான் திரும்ப செலுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. நானும்,

பிரதிவாதியும் சரிசமமாக திரும்ப செலுத்தினோம். இந்த விவரத்தை பிராதிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பும், என்னுடைய வருமானமும் கடன் தொகைக்கு சமமாக இல்லாததால் யாராவது பொறுப்புஉறுதியாளராக இருந்தால் தான் கடன் கொடுக்க முடியும் என்று வங்கி சொன்னதால் சாரதா சுந்தரமூர்த்தி கடனுக்கு பொறுப்பு உறுதியாளராக இருந்தார். வீட்டை கட்டி முடிப்பதற்கு முன்னரே என் தந்தை காலமாகிவிட்டார். சுமார் 2001ம் வருடத்திலிருந்து என் தந்தைக்கு மறதிவியாதி ஏற்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டிந்தார். ஆகவே என்னுடைய தந்தையின் ஓய்வூதியம் என்னுடைய தாயாரின் கூட்டுகணக்கில் தான் வரும். அதிலிருந்து என் தந்தை பென்ஷனை எடுத்தார். 27.10.2021ல் நான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பவதற்கு முன்னர் பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணத்தில் உள்ள சரத்துக்கள் எனக்கு தெரியும். பிரதிவாதியின் மனைவிக்கு உயிர்கொல்லும் இருதய நோய் ஏற்பட்டு ராமசந்திரா மருத்துவமனையில் சேர்ந்து 1995ல் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பிரதிவாதி தான் அந்த மொத்த மருத்துவ செலவையும் ஏற்றுக்கொண்டார். அதுபோன்று என் மகள் 8 மாத குழந்தையாக இருந்தபோது 1996ல் என் மகளுக்கும் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. என் மகளின் அறுவை சிகிச்சைக்கு என் தந்தை பணஉதவி எதையும் செய்யவில்லை. தாவா சொத்தில் தரைதளம் மற்றும் முதல்தளம் 2003ல் கட்டி முடிக்கப்பட்டது. 2003ம் வருடத்திலிருந்து தாவா சொத்தில் நாங்கள்

குடியிருக்கிறோம். மாதம் ஞாபகமில்லை. மணவாளநகரில் 1990ல் நான் கணேஷ் மெடிக்கல்ஸ் நடத்தி வந்தேன். அந்த கடையை வைக்க என் தந்தை பணஉதவி செய்தார் என்றால் சரியல்ல. நான் சேமித்து வைத்த பணத்தில் இருந்து அந்த கடையை ஆரம்பித்தேன். பிரதிவாதி குடியிருப்பதற்காக தரைதளத்தை கட்டினார் என்றும் என் தந்தை இறந்தபிறகு என் தாயாரும், நானும் அவருடன் இருக்கவேண்டும் என்று நினைத்து அவர் முதல்தளத்தை கட்டினார் என்றால் சரியல்ல. 2 தெரு தள்ளி இருந்த என்னை பிரதிவாதி அவருக்கு அருகிலேயே வைத்து கொள்ள என்னை தரைதளத்தில் வாடகைக்கு வைத்தார் என்றால் சரியல்ல. தரைதளம் எனக்கு என்றும், முதல்தளம் பிரதிவாதிக்கு என்று முடிவுசெய்து தான் வீட்டை கட்டினோம். 2019க்கு முன்பிருந்தே என் தாயாருக்கு புற்றுநோய் இருந்தது. பிரதிவாதியும் என் தாயாருக்கு மருத்துவ செலவுகளை செய்தார் என்றால் சரியல்ல. அவருக்கு வருமானமே இல்லை. பிரதிவாதிக்கு 2 ஆண் குழந்தைகள். அவர்கள் இருவரும் பொறியியல் படிப்பு முடித்துவிட்டு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறார்கள். பிரதிவாதியின் வாழ்வாதாரத்திற்கு என் தாயார் உதவி செய்தார். பிரதிவாதி என்னிடம் கேட்டு வரவில்லை. என் தாயார் உதவி செய்த விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் அதை பற்றி கேட்காததால் நான் சொல்லவில்லை. பினாமி பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தை பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை கிரைய பணம் முழுவதும் கொடுத்ததால் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து பெயரவிலான

உரிமையாளர் என்று பிராதில் சொல்லியுள்ளேன். என் தந்தை உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. என் தந்தையின் வாரிசு என்ற முறையில் என் அம்மாவிற்கும் என் சகோதரிகளுக்கும் தாவா சொத்தில் பங்கு இருக்கிறது. நான் குடும்பத்திற்கு அதிகமாக செய்ததால் என்னையும், பிரதிவாதியையும் சொத்தை பிரித்துக் கொள்ளும்படி அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் அதற்கான ஆவணம் எதையும் எழுதி கொடுக்கவில்லை. மணவாளநகரில் உள்ள என் கடையை 2021ல் ரெட்டி என்பவருக்கு விற்றுவிட்டேன். அந்த விற்ற காலத்தில் என் மகளின் மகள் அகால மரணம் அடைந்ததால் நான் மனஉளைச்சலில் இருந்தேன். சிறு காலகட்டத்தில் நான் தாவா சொத்தின் தரைதளத்தை காலிசெய்துவிட்டு வில்லிவாக்கம் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. என் மகளின் 2வது டெலிவரிக்காக வில்லிவாக்கம் சென்றிருந்தேன். எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். நான் செப்டம்பர் 2021 வரை பிரதிவாதியிடம் மாதவாடகை ரூபாய் 3500/-ஐ செலுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. தரைதளம் என் சொந்த வீடாகும். ஆகஸ்டு 2021ல் எனக்கு பெருத்த பொருள் இழப்பு ஏற்பட்டது என்றும் ஆகவே அக்டோபர் 2021 முதல் தாவா சொத்தில் பங்கு கேட்டு பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பொருள் இழப்பு எதுவும் ஏற்படவில்லை. என் தாயார் அவரது நகைகளை என் மனைவிடம் மொத்தமாக கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் சுயசம்பாத்திய சொத்து என்றும் அதில் நான் பாகம் எதுவும்

கேட்கமுடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணம் இருக்கும் விவரம் 2002ம் வருடமே எனக்கு தெரியும் என்பதால் இவ்வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தந்தை இறந்தபிறகு பிரதிவாதி தான் எங்கள் குடும்பத்தில் கர்த்தாவாக இருந்தார். அந்த விவரத்தை பிராதில் சொல்லவில்லை. கிரைய ஆவணத்தை கேள்விகேட்காமல் வெறும் பாகப்பிரிவினை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. அக்டோபர் 2021 முதல் நான் பிரதிவாதிக்கு வாடகை செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.